# மெட்ரோ ரெயில் திட்டம்

முதலாவதாக, கண்ணன் கோட்டை–தேர்வாய்கண்டிகை புதிய நீர்த்தேக்கத்தை மக்களுக்கு மத்திய மந்திரி அமித்ஷா அர்ப்பணித்தார். தொடர்ந்து, மெட்ரோ ரெயில் 2–வது திட்டத்திற்கு அவர் அடிக்கல் நாட்டினார். இதேபோல், கோவை அவினாசி சாலையில் ரூ.1,620 கோடியில் உயர்மட்ட சாலை திட்டம், கரூர் மாவட்டம் நஞ்சை புகளூரில் ரூ.406 கோடியில் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்படும் கதவணைத் திட்டம், சென்னை வர்த்தக மையத்தை ரூ.309 கோடியில் விரிவுபடுத்தும் திட்டம், வல்லூரில் ரூ.900 கோடியில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் பெட்ரோலிய முனையம், அமுல்லைவாயலில் ரூ.1,400 கோடியில் லூப் பிளாண்ட் அமைக்கும் திட்டம் மற்றும் எண்ணூர் காமராஜர் துறைமுகத்தில் ரூ.900 கோடியில் புதிய இறங்கு தளம் அமைக்கும் திட்டம் ஆகியவற்றுக்கும் மத்திய மந்திரி அமித்ஷா அடிக்கல் நாட்டினார். புதியதாக அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்களை விளக்கும் வகையிலான குறும்படங்களும் இடையிடையே ஒளிபரப்பப்பட்டன.

தொடர்ந்து, துணை முதல்–அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சிறப்புரை ஆற்றினார். அதன் பின்னர், முதல்–அமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமை உரையாற்றினார். நிறைவாக, மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா சிறப்புரை ஆற்றினார். அப்போது அவர் பேசியதாவது:–